அரசு மைய அச்சகம், சென்னை—600 079

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 24

## சிறைச்சாலைகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2014–2015

**எஸ்.பி. வேலுமணி**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2014

<u>பொருளடக்கம்</u>


| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| I. | முன்னுரை | 1-2 |
| II. | நிர்வாக அமைப்பு | 3-5 |
| III. | சிறைகள் | 5-13 |
| IV. | சிறைவாசிகள் நலன் | 13-33 |
| V. | சிறைத்துறைப் பணியாளர்கள் நலன் | 33-47 |
| VI. | புதிய முன்முயற்சிகள் | 47-52 |
| VII | முடிவுரை | 52-53 |
| | இணைப்பு I-II | 55-63 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண். 24

# சிறைச்சாலைகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

## I. முன்னுரை

சட்டமும் தண்டனையும் மனித சமுதாயம் உருவான காலத்தில் இருந்தே அதன் கூட்டு உளச்சான்றின் பிரதிபலிப்பாக எப்போதுமே இருந்து வருகின்றன. இவை இரண்டும் சமுதாயத்தில் சமாதானம் மற்றும் பொது அமைதியைப் பேணிக் காக்கும் கருவிகளாக இருக்கின்றன.

குற்றங்களைக் குறைப்பதற்காக மனித இனம் காலங்காலமாகப் பல்வேறு வழிகளில் கடும் முயற்சி செய்துவருகின்றது. இவற்றில், குற்றச் செயல் புரிபவர் / சட்டத்தை மீறுபவரை சமுதாயத்திலிருந்து நீக்குவதும், அவருடைய சுதந்திரத்தை மிக வெகுவாகக் குறைப்பதும் முதன்மையானவையாக இருந்து வருகின்றன. குற்றச்செயல் நடந்த இடத்திலிருந்து குற்றவாளியை அப்புறப்படுத்துவதால் அவரை அந்தக் குற்றச்செயலைத் தொடராமல் தடுப்பதுடன் பாதிக்கப்பட்டவர் மற்றும் சமுதாயத்தின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகின்றது.

மானுட நடத்தை அறிவியலில் ஏற்பட்டுள்ள பெருமளவிலான வளர்ச்சியின் காரணமாகக் குற்றம் புரிபவரை விடுத்து குற்றமுடைமை (குற்றப்பழக்கம்) மீது கவனம் திரும்பி இருக்கின்றது. குற்றவாளிகளை நன்னெறிப்படுத்தி விடுதலைக்குப்பின்னர் அவர்கள் அமைதியான செயலாக்கம் மிக்க நல்ல குடிமக்களாக மாறி சமுதாயத்தில் இணைந்திட செய்வதே இதன் குறிக்கோளாகும்.

சிறைச்சாலை என்பது இப்பொழுது, சட்டத்தை மீறுபவர்கள் அதற்குரிய தண்டனையை அடைவார்கள் எனும் நம்பிக்கையைக் குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவருக்கும், சமுதாயத்திற்கும் ஏற்படுத்தும் முனையமாகச் செயல்படுவதோடு மட்டுமல்லாமல் அது குற்றவாளிகளுக்கு சீரிய சீர்திருத்தமும் உரிய அதிகாரமும் வழங்கி குற்றவாளிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும் நன்னம்பிக்கை அளிக்கும் மையமாக உள்ளது.

இந்த சீரிய விளைவினை அடைவதற்காகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறந்த வழிகாட்டுதல்களின்படி இந்த அரசு குற்றவாளிகளின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அவர்கள் பொருளாதார ரீதியில் சுதந்திரமானவர்களாகவும், மனித மாண்புடன் நல்ல வாழ்க்கை வாழ்ந்திட ஏதுவாக செயல்படுத்தி வருகின்றது.

## II. நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு சிறைத்துறை, அரசின் உள்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. கூடுதல் காவல்துறை இயக்குநர் பதவி நிலையில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் இத்துறை இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக தலைமையிடத்தில் ஒரு சிறைத்துறைத் துணைத்தலைவரும் மற்றும் நான்கு சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகியவற்றை தலைமையிடங்களாகக் கொண்ட நான்கு சரகங்களில் உள்ளனர். மேலும் சென்னை மற்றும் வேலூர் மாவட்டங்களில் அமைந்துள்ள அனைத்து சிறைகளையும் மேற்பார்வையிடுதலை மேம்படுத்தும்பொருட்டு அரசாணை (நிலை) எண். 169, உள் (சிறை.I) துறை, நாள்:25.02.2014–ன்படி வேலூர் சரகத்திற்கு ஒரு சிறைத்துறை துணைத்தலைவர் பணியிடம் தோற்றுவிக்க ஆணையிட்டுள்ளது. சிறைத்துறையின் நிர்வாக கட்டமைப்பு பிற்சேர்க்கை–Iல் கொடுக்கப்பட்டுள்ளது. சிறைக் கண்காணிப்பாளர்களின் நிர்வாக கட்டுப்பாட்டில், மத்தியசிறைகளும், அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டச் சிறைகள், தனிக்கிளைச்சிறைகள், திறந்த வெளிச்சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் ஆகியவை இயங்கி

வருகின்றன. இரண்டாம் நிலை காவலர் மற்றும் சிறை அலுவலர் பதவிகள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படுகின்றன.

தமிழ்நாடு சிறைத்துறையில் 1946 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் நன்னடத்தைப் பிரிவானது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது. அவருக்கு உதவியாக 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களும், 64 நன்னடத்தை அலுவலர்களும் உள்ளனர்.

நன்னடத்தை அலுவலர்கள், குற்றவியல் நீதித்துறை நடுவர்களின் ஆணைகளின் பேரில் குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்களது வாழ்க்கை நிலைகள் குறித்து நேரடி விசாரணை செய்து நீதிமன்றங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள். முதன்முறையாகக் குற்றமிழைத்தவர்களை சிறைக்கு அனுப்புவதற்குப் பதிலாக நீதிமன்றத்தின் மூலம் விடுவிப்பது நன்னடத்தை அலுவலர்களின் தலையாய பணியாகும். மேலும், நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் நபர்களை கண்காணித்து அவர்களது மறுவாழ்வு மற்றும் சீர்திருத்தப் பணிகளை கவனிக்கின்றனர். பல்வேறு சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள தண்டனை சிறைவாசிகளின் விடுப்பு கோரும் நேர்வுகளில் அது குறித்து விசாரணை மேற்கொண்டு அதன் உண்மைத் தன்மை தொடர்பாக அறிக்கை அளிக்கின்றனர்.

சிறைத்துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5177 ஆகும்.

## **III. சிறைகள்**

மாநிலத்தில் 9 மத்திய சிறைகள், பெண்களுக்கான 3 தனிச் சிறைகள், 9 மாவட்டச் சிறைகள், ஆண்களுக்கான 87 கிளைச் சிறைகள், பெண்களுக்கான 8 கிளைச்சிறைகள், ஆண்களுக்கான 2 தனிக் கிளைச்சிறைகள், பெண்களுக்கான 3 தனிக் கிளைச் சிறைகள், 12 பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் 3 திறந்த வெளிச் சிறைகள் ஆக மொத்தம் 136 சிறைச்சாலைகள் உள்ளன. இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் சேர்த்து 22,101 சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க இடவசதி உள்ளது. இதுபற்றிய விவரக்குறிப்பு பிற்சேர்க்கை–IIல் கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் முன்னர் செயல்பட்ட மத்திய சிறையில் ஏற்பட்ட இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டு அதனை சரி செய்ய அரசாணை (நிலை) எண்.957, உள் (சிறை.4) துறை, நாள்: 29.09.2003–ல் ஆணையிட்டவாறு, புழலில் 211 ஏக்கர் நிலப்பரப்பில் 3,000 சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில் மூன்று சிறைகளுடன் கூடிய சிறை வளாகம் ரூ.77.09 கோடி செலவில் அமைக்கப்பட்டது. இவற்றுள், மத்திய சிறை–I தண்டனை சிறைவாசிகளுக்கெனவும்,

மத்திய சிறை—II விசாரணை சிறைவாசிகளுக்கெனவும், பெண்கள் தனிச்சிறையானது பெண் சிறைவாசிகளுக்காகவும், வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மரண தண்டனை, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைவாசிகள், பெருங்குற்றங்களுக்கு தண்டனைப் பெற்றவர்கள், கொடுங்குற்றவாளிகள், தொடர்ந்து குற்றம் புரிபவர்கள் மற்றும் அபாயகரமான சிறைவாசிகள், கடன் சிறைவாசிகள், தடுப்புக் காவல் சிறைவாசிகள், மூன்று மாதங்களுக்கு மேல் தண்டனைப் பெற்றவர்கள், விசாரணை மற்றும் காவல் சிறைவாசிகள் என முறைப்படி வகைப்படுத்தப்பட்டு, இந்த வகைப்பாட்டின்படி மத்திய சிறைகளில் அவர்கள் வெவ்வேறு பகுதிகளில் தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். நீதிமன்றத்தால் மூன்று மாதங்களுக்கு கீழ் தண்டனைப் பெற்றவர்கள், விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் மட்டுமே அந்தந்த மாவட்ட சிறைகளில் வைக்கப்படுகின்றார்கள். சிறு குற்றங்கள் புரிந்த விசாரணை சிறைவாசிகள் மட்டும் கிளைச்சிறைகளில் வைக்கப்படுகின்றார்கள். வெளிநாட்டைச் சேர்ந்த தண்டனை / காவல் / நீதிமன்ற வழக்கு விசாரணை சிறைவாசிகள் ஆகிய அனைவரும் சென்னை புழல் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் வைக்கப்படுகின்றார்கள். கடுங்குற்றங்கள் புரிந்த பெண்சிறைவாசிகள் மாநிலத்தில் உள்ள 3 தனிச்சிறைகளில் வைக்கப்படுகின்றனர். பெண்களுக்கான தனிக்கிளைச்சிறை /

கிளைச்சிறைகளில் காவல் மற்றும் விசாரணை சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். 18 முதல் 21 வயதுக்குட்பட்ட தண்டனை பெற்ற வளர்இளம் குற்றவாளிகள், புதுக்கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். விசாரணை / காவல் வளர் இளம் சிறைவாசிகள் ஏனைய 11 பார்ஸ்டல் பள்ளிகளில் வைக்கப்படுகின்றனர். சட்டத்திற்கு புறம்பாக குற்றங்களில் ஈடுபடும் 18 வயதுக்கு கீழ் உள்ளோர் சமூக பாதுகாப்பு துறையின் பராமரிப்பில் வருவர். திடமான உடல் நிலை, மனநிலை, நன்னடத்தை, எளிதில் உணர்ச்சி வசப்படாத தன்மை மற்றும் விவசாயப் பின்னணி உடைய 21 வயதிலிருந்து 55 வயதிற்குட்பட்ட சிறைவாசிகள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள புரசடையுடைப்பு கிராமத்தில் ரூ.2.47 கோடி செலவில், 150 சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில் உருவாக்கப்பட்ட புதிய திறந்தவெளிச்சிறை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 09.12.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

## பாதுகாப்பு

### உயர் பாதுகாப்பு தொகுதிகள்

சிறைவாசிகளின் உரிமை மற்றும் கண்ணியத்திற்கு குறைவு ஏற்படாத வண்ணம், சிறைவாசிகளின் பாதுகாப்பு

மற்றும் சிறைவாசிகள் சிறையிலிருந்து தப்பிப்பதை தடுப்பது ஆகியவற்றிற்கு சிறை நிர்வாகத்தில் உயர் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகளை வைப்பதற்காக, அனைத்து மத்திய சிறைகளிலும் உயர்பாதுகாப்பு தொகுதிகள் கட்டப்பட்டுள்ளன. இந்த உயர்பாதுகாப்பு தொகுதிகள் சிறைக் காவலர்களால், தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. மத்திய சிறைகளின் வெளிப்புறம் காவல் துறையினரால் பாதுகாக்கப்படுகிறது. இத்தகைய சிறைவாசிகள், அன்றாட சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களாலும் சோதனைச் செய்யப்படுகின்றனர். கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், சிறைவாசிகளின் கண்ணியத்தை காப்பதற்கு அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. சிறைவாசிகளின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதுடன், சிறைப் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் அவ்வப்போது அளிக்கப்படும் அனைத்து பயிற்சிகளிலும் இந்த நோக்கம் வலியுறுத்தப்படுகிறது.

சிறைகளில், எந்த அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, நாச வேலைகளைத் தடுத்தல் குறித்த

பரிசோதனைகள் வழக்கமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்திட, இத்துறையில் உள்ள மோப்பநாய் பிரிவும் பயன்படுத்தப்படுகிறது. உயர்பாதுகாப்பு தொகுதிகளில் வைக்கப்பட்டுள்ள சிறைவாசிகளைப் பார்வையிட வரும் பார்வையாளர்கள் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

<u>செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள்</u>

சிறைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன் மாநிலத்தின் 9 மத்திய சிறைகளில் உள்ள 15 உயர்பாதுகாப்பு தொகுதிகளில் ரூ.5.40 கோடி செலவில் செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் உயர்நுட்ப கருவிகள் பொருத்திட, நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை (நிலை) எண்.1042, உள் (சிறை.4) துறை, நாள்:28.11.2013–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

<u>ஊடுகதிர் அலகிடல் கருவிகள்</u>

கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, பாளையங்கோட்டை மற்றும் மத்திய சிறை–I, புழல் ஆகிய சிறைகளில் அமைக்கப்பட்டுள்ள ஊடுகதிர் அலகிடல் கருவிகள், போதைப்

பொருட்கள் ஆயுதங்கள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருட்கள், சிறையினுள் நுழைவதை சிறப்பாகக் கட்டுப்படுத்துகிறது. எனவே, அரசாணை (நிலை) எண்.478, உள் (சிறை.4) துறை, நாள்:10.07.2013—ல் மத்தியசிறை—2, புழல், வேலூர், கடலூர் மற்றும் சேலம் மத்திய சிறைகளுக்கு ரூ.96.18 இலட்சம் செலவில் நான்கு ஊடுகதிர் அலகிடல் கருவிகள் கொள்முதல் செய்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு, சிறையினுள் தடைசெய்யப்பட்ட பொருட்கள் கடத்துதல் மற்றும் குற்றம் சார்ந்த பொருட்கள் நுழைவது தடுக்கப்படுகின்றன.

<u>சிறைகள் மற்றும் நீதிமன்றங்களில் காணொலி கலந்துரையாடல் வசதிகள்</u>

காணொலி கலந்துரையாடல் மூலம் சிறைகளையும் நீதிமன்றங்களையும் இணைக்கும் வசதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.07.2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சிறைவாசிகளின் நீதிமன்றக்காவலை, அவர்களை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல் நீட்டிக்க இயலும். தற்போது இத்திட்டம் 17 இடங்களை உள்ளடக்கிய அனைத்து மத்தியசிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளிலும் 276 நீதிமன்றங்களை உள்ளடக்கிய 64 நீதிமன்ற வளாகங்களிலும் செயல்பாட்டில் உள்ளது. சிறைவாசிகளின் நீதிமன்றக் காவலை காணொலி

கலந்துரையாடல் மூலம் நீட்டிப்பதால், வழிக்காவலின் போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்க உதவுவதோடு மட்டும் அல்லாமல் வழிக்காவல் மற்றும் போக்குவரத்திற்காக ஆகும் செலவைக் குறைக்கவும் உதவுகிறது. 31.05.2014 வரை விசாரணை காலம் நீட்டிப்புக்காக மொத்தம் 8,42,523 சிறைவாசிகள் காணொலி கலந்துரையாடல் மூலம் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வசதியை மேலும் 28 இடங்களில் உள்ள 30 நீதிமன்றங்களுக்கு விரிவுபடுத்திட அரசாணை (நிலை) எண்.523, உள் (சிறை—4) துறை, நாள்: 16.09.2011—ல் ரூ.3.12 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. காணொலி கலந்துரையாடல் வசதியினை 16 சிறைகள் மற்றும் 44 நீதிமன்றங்கள் உள்ளிட்ட 60 இடங்களுக்கு விரிவுபடுத்திட அரசாணை (நிலை) எண்.797, உள் (சிறை.4) துறை, நாள்:07.10.2013ல், ரூ.6.91 கோடிக்கான நிதி மற்றும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## சிசிடிவி கேமராக்கள் (CCTV Cameras)

அரசாணை (நிலை) எண். 798, உள் (சிறை.4) துறை, நாள்:07.10.2013—ன்படி அனைத்து மத்தியசிறைகள், மகளிர்

தனிச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் சிறைவாசிகள் மற்றும் பார்வையாளர்களின் நடமாட்டத்தை கண்காணித்திடும் வகையில் அச்சிறைகளில் தனிக்கவனம் தேவைப்படும் இடங்களில், ரூ.2.21 கோடி செலவில் கூடுதலாக 60 சிசிடிவி கேமராக்களை நிறுவிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>வாக்கி டாக்கி கருவிகள்</u>

அனைத்து மத்தியசிறைகள் மற்றும் புழல், வேலூர், மற்றும் திருச்சி பெண்கள் தனிச்சிறைகளில் உபயோகத்தில் உள்ள 100 கையடக்க வாக்கி டாக்கி கருவிகளை மாற்றி, ரூ.10.00 இலட்சம் செலவில் உபரி பேட்டரி பேக்குடன் புதிய வாக்கி டாக்கி கருவிகள் வழங்கிட அரசாணை (நிலை) எண்.383, உள்(சிறை.4) துறை, நாள்:13.06.2013–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>கட்டுமானம் மற்றும் பழுது பார்க்கும் பணிகளை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் மேற்கொள்ளுதல்</u>

சிறைத்துறையில் புதிய கட்டடங்கள் கட்டுதல், தற்போதுள்ள சிறை கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறை கட்டடங்களை பரவலாகப் பராமரித்தல்

அரசாணை (நிலை) எண்.1118, உள்(சிறை.4) துறை, நாள்:09.12.2013ல் கடலூர், வேலூர், சேலம், மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள மத்திய மற்றும் கிளைச்சிறை கட்டடங்களின் பராமரிப்புப்பணிகளைப் பரவலாக செய்திட ரூ.5 கோடிக்கு நிதி மற்றும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## IV. சிறைவாசிகள் நலன்

உணவு மற்றும் உடை

சுகாதாரமான சூழலில் சத்தான உணவு, தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி II அத்தியாயம் 22–ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி, சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ உணவுகளாக பால், ரொட்டி, முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவை மருத்துவ அலுவலர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகின்றன. இவை தவிர, அசைவ உணவு சாப்பிடும் அனைத்து சிறைவாசிகளுக்கும் வாரம் ஒரு முறை 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு, வாரம் ஒரு முறை உருளைக்கிழங்கு கறி, கேசரி மற்றும் ஒரு வாழைப்பழம் ஆகியவையும் வழங்கப்படுகின்றன. சுத்தம்

மற்றும் சுகாதாரத்தினை உறுதிப்படுத்தும் வகையில் சமைப்பதற்கு எவர்சில்வர் பாத்திரங்களும் உணவினை எடுத்துச்செல்ல தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப்படுவதோடு சிறைவாசிகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் குவளைகளும் வழங்கப்பட்டுள்ளன.

சிறைவாசிகளுக்கான உணவினை சமைப்பதற்கு கடலை எண்ணெய் பயன்படுத்தப்பட்டு வந்தது. கூடுதல் கொழுப்பை உள்ளடக்கிய கடலை எண்ணெயை தொடர்ந்து பயன்படுத்தினால் சிறைவாசிகளுக்கு பல்வேறு வகையான இதய நோய்கள் ஏற்படலாம். எனவே, 'ஆ' வகுப்பு சிறைவாசிகள், சாதாரண வகுப்பு காவல் மற்றும் விசாரணை சிறைவாசிகளுக்கான உணவினைத் தயாரிக்க வாரத்தில் திங்கள் முதல் சனி வரை 6 நாட்கள் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயையும், ஞாயிற்றுக்கிழமை நல்லெண்ணெயையும் உபயோகப்படுத்திட அரசாணை (நிலை) எண்.371, உள் (சிறை.4)துறை, நாள்:20.05.2014–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பாலூட்டும் பெண் சிறைவாசிகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, அவர்களுக்கு கூடுதலாக பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுடன் உள்ள குழந்தைகளுக்கு பால், பிஸ்கட், வாழைப்பழம் மற்றும் குழந்தைகளுக்கான உணவு ஆகியன வழங்கப்படுகின்றன.

சிறைவாசிகளுக்கு உணவு அளிப்பதற்காக 2013–14 ஆம் ஆண்டில் ரூ.27.39 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் வரையறுக்கப்பட்டவாறு சிறைவாசிகளுக்கான ஆடைகள் மற்றும் படுக்கைகளும் வழங்கப்படுகின்றன. தண்டனை சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் முழுக்கால் சட்டைகள், மேல்சட்டைகள் மற்றும் பெரிய அளவிலான போர்வைகள் வழங்கப்படுகின்றன. காவல் சிறைவாசிகள் தமக்குத் தேவையான ஆடைகள் மற்றும் படுக்கைகளைக் கொண்டு வர அனுமதிக்கப்படுகின்றனர். தேவையான ஆடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு அரசு செலவில் தேவையான ஆடைகள் வழங்கப்படுகின்றன.

<u>சிறைவாசிகளின் சீருடையில் மாற்றம்</u>

சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ‘ஆ’ வகுப்பு தண்டனை சிறைவாசிகளுக்கான சீருடையை அரைக்கால் சட்டையிலிருந்து முழுக்கால் சட்டையாக மாற்றி வழங்கிட அரசாணை (நிலை) எண்.115, உள் (சிறை–3) துறை, நாள்: 27.01.2012–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>சிறை தொழிற்கூடங்களில் பணிபுரியும் சிறைவாசிகளின் ஊதிய உயர்வு</u>

தண்டனைப் பெற்ற சிறைவாசிகளுக்கிடையே உழைப்பின் அவசியத்தை மனதில் ஆழப்பதியவைக்க ஏதுவாக

அவர்கள் சிறைத்தொழிற்சாலைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படுகிறது. அவ்வாறு பணியில் ஈடுபடுத்தப்படும் சிறைவாசிகள், செயற்திறன் பெற்றோர், ஓரளவு செயற்திறன் பெற்றோர், செயற்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டு அதற்கேற்ப ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் நாள் ஒன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு மேற்கூறிய வகைப்பாட்டின்படி முறையே ரூ.60/–, ரூ.50/– மற்றும் ரூ.45/– ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது. அரசாணை (நிலை) எண்.691, உள் (சிறை–3) துறை, நாள்:28.10.2011–ன்படி, இந்த ஊதியம் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

- செயற்திறன் பெற்றோர் ரூ.100/–
- ஓரளவு செயற்திறன் பெற்றோர் ரூ.80/–
- செயற்திறன் பெறாதோர் ரூ.60/–

தற்போது சிறை தொழிற் கூடங்களில் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு மேற்கண்ட உயர்த்தப்பட்ட ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

<u>குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் சிறைவாசிகள் நேர்காணல்</u>

சிறைவாசிகள், தங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுடன் தொடர்பில் இருக்கும் பொருட்டு உரிய

நடைமுறையை பின்பற்றி அவர்களை சந்தித்துப்பேச அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நேர்காணல் செய்வதற்காக விலையில்லா விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், இவ்விண்ணப்பப் படிவங்களை சிறைத்துறையின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வெகுதூரத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களும் எவ்வித இடையூறும் இன்றி எளிதாக நேர்காணலுக்கு விண்ணப்பிக்க இந்த வசதி உதவுகிறது.

வழக்குரைஞர்கள் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

## பார்வையாளர்கள் மேலாண்மை திட்டம்

அரசாணை (நிலை) எண்.385, உள் (சிறை.4) துறை, நாள்:13.06.2013–ன்படி ரூ.1.3 கோடி செலவில் அனைத்து மத்தியசிறைகள், மூன்று பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகிய சிறைகளிலுள்ள சிறைவாசிகளை காண வரும் பார்வையாளர்கள் குறித்த விவரங்களை சேகரிக்கவும், நேர்காணல் முறையை சீரமைக்கவும் எளிய வழிமுறைகளை கொண்ட

பார்வையாளர்கள் மேலாண்மை திட்டத்தினை அறிமுகப்படுத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக சிறைகளில் தொலைபேசி வசதி அறிமுகம்</u>

சிறைவாசிகளது நீண்டகால கோரிக்கையை ஏற்று அவர்கள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களுடன் கலந்துரையாட ஏதுவாக, **9** மத்தியச் சிறைகள், **3** பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் ரூ.**1.64** கோடி செலவில், **54** தொலைபேசிகூடங்கள் அமைக்க அரசாணை **(**நிலை**)** எண்.**524** மற்றும் **644**, உள் **(**சிறை.**3)** துறை, நாள்:**16.09.2011** மற்றும் **03.09.2012**–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு தொலைபேசி கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **09.12.2013** அன்று துவக்கி வைக்கப்பட்டு அன்றைய தினத்திலிருந்து செயல்பாட்டில் இருந்து வருகிறது. இதனால் **31.05.2014** வரை **62,481** சிறைவாசிகள் பயனடைந்துள்ளனர்.

<u>மன இயல் நிபுணர்கள் நியமனம்</u>

அரசாணை **(**நிலை**)** எண்.**781**, உள் **(**சிறை.**1)** துறை, நாள்:**17.11.2011**–ன்படி இத்துறைக்கு **9** மன இயல் நிபுணர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் வன்முறை செயல்களில் ஈடுபடும் குணம்

உடைய சிறைவாசிகளிடம் கலந்துரையாடல் செய்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்க இந்த மன இயல் நிபுணர்களின் பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

<u>மத்திய சிறைகளில் ஆற்றுப்படுத்துநர் பணிகளைப் பயன்படுத்துதல்</u>

9 மத்திய சிறைகளில் உள்ள மனதளவில் பாதிக்கப்பட்ட சிறைவாசிகளின் மனநலனை மேம்படுத்தும்பொருட்டு, அவர்களுக்கு ஆலோசனை வழங்க ஒவ்வொரு மத்திய சிறையிலும் இரண்டு ஆற்றுப்படுத்துநர்கள் ரூ.15,000/– என்ற மதிப்பூதியத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.32.40 இலட்சம், அரசாணை (நிலை) எண்.704, உள் (சிறை.3) துறை, நாள்:17.09.2013–ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>சுகாதாரம் மற்றும் உடல் நலம் பேணுதல்</u>

சிறைவாசிகளுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளித்திட போதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகளை இருப்பில் கொண்ட மருத்துவமனைகள், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளிலும் உள்ளன. இந்த மருத்துவமனைகளில் அனுபவமிக்க மருத்துவ அலுவலர்கள், துணை மருத்துவப் பணியாளர்களின் உதவியுடன் சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளிக்கின்றனர். தேவைப்படும் சிறைவாசிகள்

சிறை மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர். சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை வெளி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்காக அனைத்து மத்தியச் சிறைகள், பெண்களுக்கான தனிச்சிறைகள், பெண்கள் கிளைச் சிறைகள் மற்றும் 5 தனிக் கிளைச்சிறைகளுக்கு அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சிறைவாசிகளின் நோய்களின் தன்மைகளைக் கண்டறியும் பொருட்டு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், இதயத்துடிப்பை அறிய உதவும் சாதனங்கள் (E.C.G), இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கி கருவிகள், கண்பார்வை பரிசோதனை செய்யும் கருவி (Opthalamoscope), இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கண்டறியும் கருவி (Glucometer) மற்றும் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய ஊடுகதிர் படமெடுக்கும் கருவிகள் ஆகியவை மத்தியசிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது தவிர குறிப்பிட்ட உடல் உபாதைகள் உள்ள சிறைவாசிகளுக்கு குறித்த கால இடைவெளியில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள், சென்னை, அரசு மனநலக் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டு, அங்கு அவர்களுக்கு போதுமான சிகிச்சை

அளிக்கப்படுகிறது. மத்தியச் சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள மனநலம் பாதித்த சிறைவாசிகளை பராமரித்திட அரசு மருத்துவ மனைகளில் உள்ள மனநல மருத்துவரின் பணிகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

சிறைவாசிகளின், உடல் நலம் பேணும் நடவடிக்கையாக, புகை பிடித்தல் மற்றும் புகையிலை உபயோகித்தல் சிறைகளில் தடை செய்யப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு, எச்ஐவி (HIV) பரிசோதனை செய்வதற்காக, அனைத்து மத்தியச் சிறைகளிலும் பரிசோதனை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அனைத்துச் சிறைவாசிகளும் உரிய கலந்தாய்வுக்குப் பின்னர், எய்ட்ஸ் நோய்க்கான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண் சிறைவாசிகளுக்கு விலையில்லா 'சானிட்டரி நாப்கின்கள்' வழங்கப்படுகின்றன.

மேலும், சிறைவாசிகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்திட சிறைகளில் தற்போதுள்ள கழிப்பிட வசதிகளை ரூ.3.6 கோடி செலவில் மேம்படுத்த, அரசாணை (நிலை) எண்.799, உள் (சிறை.4) துறை, நாள்:07.10.2013–ல் நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நோயுற்ற சிறைவாசிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசாணை (நிலை) எண்.380, உள் (சிறை.4) துறை, நாள்: 13.06.2013–ல் மத்தியசிறை–I, புழல் மற்றும் மத்திய சிறை, மதுரை ஆகிய சிறைகளில் உள்ள அவசர சிகிச்சை ஊர்திகளில் ரூ.2.00 இலட்சம் செலவில் உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை பொருத்திட ஆணையிடப்பட்டுள்ளது. சேலம் பெண்கள் தனிக்கிளைச்சிறை, திருச்சி மகளிர் தனிச்சிறை, புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, மத்தியசிறை, கோவை மற்றும் சேலம் ஆகியவற்றில் உள்ள மருத்துவமனைகளில் சில அடிப்படை மருத்துவ உபகரணங்களை ரூ.1.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்க அரசாணை (நிலை) எண்.381, உள் (சிறை.4) துறை, நாள்:13.06.2013 –ல் ஆணையிடப்பட்டுள்ளது. பெண்கள் தனிச்சிறை, புழலில் உள்ள சிறை மருத்துவமனையில் அடிப்படை தேவைகளை ரூ.2.00 இலட்சம் செலவில் பூர்த்தி செய்திட அரசாணை (நிலை) எண்.382, உள்(சிறை.4) துறை, நாள்:13.06.2013–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>சிறைவாசிகளின் உபயோகத்திற்கு பயன்படுத்திய பின்னர் தீர்வு செய்யக்கூடிய சவர ரேசர்கள் வழங்குதல்</u>

முன்னர், மத்திய சிறைகளில் பணியமர்த்தப்பட்டிருந்த முடிதிருத்துநரால் கத்தியைக் கொண்டு சிறைவாசிகளுக்கு

முகச்சவரம் செய்யப்பட்டது. ஒரே கத்தியைக் கொண்டு அனைத்து சிறைவாசிகளுக்கும் முகச்சவரம் செய்யப்பட்டதால், சிறைவாசிகளுக்கிடையே ஒட்டு நோய் பரவ வாய்ப்பு இருந்தது. எனவே சிறைவாசிகளின் பயன்பாட்டுக்கென, பயன்படுத்திய பின்னர் தீர்வு செய்யக்கூடிய சவர ரேசர்கள் மாதம் **2** வழங்கிட ஏதுவாக ஆண்டுக்கு ரூ.**43.68** இலட்சம் ஒப்பளிப்பு செய்து, அரசாணை நிலை எண்.**706**, உள்(சிறை.**4**) துறை, நாள்:**17.09.2013**ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>பொழுதுபோக்கு</u>
<u>சிறைகளில் வானொலிப்பெட்டி நிறுவுதல்</u>

இம்மாநிலத்தில் உள்ள **96** கிளைச் சிறைகளில் ரூ.**14.55** இலட்சம் செலவில் ஒலிப்பெருக்கியுடன் கூடிய பண்பலை வானொலிப்பெட்டி நிறுவ, **96** பண்பலை வானொலிப்பெட்டிகள் மற்றும் **384** ஒலிப்பெருக்கிகள் வாங்குவதற்காக அரசாணை (நிலை) எண்.**796**, உள் (சிறை.**4**) துறை, நாள்:**07.10.2013**–ல் ஆணையிடப்பட்டு, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

<u>உடல் மற்றும் மனநலம்</u>

நீண்ட காலமாக சிறையின் நான்கு சுவர்களுக்குள் சிறைவாசிகள் தண்டனையை கழிப்பது அவர்களின் மன இறுக்க அளவினை உயர்த்தி விடும். அதிக மன

இறுக்கமானது, அவர்களில் வன்முறை செயல்பாடு, மன அழுத்தம் மற்றும் தற்கொலை எண்ணங்களாக வெளிப்படுகின்றன. இதனை சரி செய்வதற்கு கலந்தாய்வு வழங்குவதுடன், உடற் பயிற்சி, யோகாசனம், தியானம், உள் மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகள் ஆகியவை சிறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 19 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அனைத்துச் சிறைகளிலும் செயல்பட்டு வரும் நூலகங்களிலிருந்து சிறைவாசிகள் புத்தகங்களைப் பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதிகள் பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் சிறைவாசிகளின் மன நலம் மேம்படவும் உதவுகின்றன.

<u>சீர்திருத்தப் பணிகள்</u>

<u>சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு</u>

சிறைவாசிகளின் மறுவாழ்விற்காகவும் விடுதலைக்குப் பின்னர் சமுதாயத்தில் அவர்கள் மீண்டும் இணைந்து வாழ உதவவும், தமிழகச் சிறைகளில் அவர்களுக்கு பல்வேறு புதுமையான சீர்திருத்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த திட்டங்கள் கல்வி / தொழிற் கல்வி மற்றும் சிறை தொழிற் கூடங்களில் செய்முறை அனுபவம்

ஆகியவற்றை உள்ளடக்கி சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்புப் பெறவோ அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக் கொள்ளவோ ஏதுவாக இருந்து வருகின்றன.

<u>கல்வி மற்றும் தொழிற் கல்வி</u>

<u>மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள்</u>

அனைத்து மத்தியச் சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. இவை தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் இலாபகரமானப் பணிகளில் ஈடுபடும் வண்ணம் அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் கல்வி, சிறைவாசிகள் கல்வியில் அடைந்துள்ள திறனின் அடிப்படையில் (i) ஆரம்பக் கல்வி (ii) தொடக்கக் கல்வி (iii) மேல்நிலைக் கல்வி (iV) திறந்த வெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு மற்றும் (V) சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு என வகைப்படுத்தப்படுகிறது. ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற

சிறைவாசிகளைக் கொண்டும் சிறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சிறைவாசிகள் 100 சதவீத எழுத்தறிவு அடைவதைக் கருத்தில்கொண்டு மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகமும், தமிழ்நாடு அரசின் கல்வித்துறையும் ஒருங்கிணைந்து வயதுவந்தோர் மற்றும் தொடர் கல்விக்கான மாநில ஆதார மையத்தின் கீழ் திட்டம் ஒன்றைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழகமும் சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பிரிவுகளை நடத்திவருகிறது.

2013–2014 ஆம் ஆண்டில் மொத்தம் 2,775 சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு படிப்புகளை தொடர்ந்து பயின்று வந்துள்ளனர்.

| பாடப்பிரிவு | சிறைவாசிகளின் எண்ணிக்கை |
|---|---|
| அடிப்படைக் கல்வி (7ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு) | 1673 |
| எழுத்தறிவு திட்டக் கல்வி (மாநில ஆதார மையம் வழியாக) | 478 |
| கணினி முதுநிலை பட்டப்படிப்பு | 2 |
| கலை / அறிவியல் முதுநிலை பட்டப்படிப்பு | 25 |

| | |
|---|---|
| கலை / அறிவியல் / வணிகவியல் / இலக்கியம் இளநிலை பட்டப்படிப்பு | 19 |
| வணிக மேலாண்மை முதுநிலை பட்டப்படிப்பு | 2 |
| வணிக மேலாண்மை இளநிலை பட்டப்படிப்பு | 1 |
| 8, 10 மற்றும் 12ஆம் வகுப்பு | 160 |
| சான்றிதழ் படிப்பு | 5 |
| பட்டயப்படிப்பு | 295 |
| அடிப்படை ஆயத்தப் படிப்பு (உயர்நிலை) | 115 |
| **மொத்தம்** | **2,775** |

அனைத்து மத்தியசிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் சிறைவாசிகளுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கும் பல்வேறு திட்டங்களை நடத்த தொழிற்பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு திட்டங்களின்கீழ் அளிக்கப்படும் தச்சுத் தொழில், கட்டுமானப் பணி, பாதுகாவலர் பணி, வாகனங்கள் பழுது நீக்கம், கணினி

அடிப்படைப் பயிற்சி, தையல், குழாய்கள் பொருத்துதல், விருந்தோம்பல் பயிற்சி மற்றும் சமையல்கலை ஆகியவற்றில் பயிற்சி பெறுவதற்கு 1796 சிறைவாசிகள் பதிவு செய்துள்ளனர்.

2012–2013 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்டயப் படிப்புக்கான தேர்வு எழுதிய 420 சிறைவாசிகளில், 345 சிறைவாசிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

1. சமையல்கலை உதவியாளர் பட்டயப்படிப்பு
2. நான்கு சக்கர வாகன இயந்திரவியல் பட்டயப்படிப்பு
3. “டி.டி.பி ஆபரேட்டர்” பட்டயப்படிப்பு (DTP)
4. வீடுகளுக்கான மின் வினைஞர் பட்டயப்படிப்பு
5. ஆடைகள் வடிவமைத்தல் பட்டயப்படிப்பு

<u>சிறை தொழிற்சாலைகளில் தொழிற் பயிற்சித் திறன் பெறுதல் மற்றும் தொழில் உற்பத்தியில் பங்குபெறுதல்</u>

சிறைவாசிகளின் தண்டனை காலம் முடிவுற்று, அவர்களின் விடுதலைக்கு பின்னர், மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காகவும், அவர்கள் வேலை வாய்ப்புப்பெற ஏதுவாகவும், அவர்களது தண்டனை காலத்திலேயே வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் தொழில்களில் உரிய செய்முறை பயிற்சிகள் அளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தண்டனை காலத்தில் சிறைவாசிகளுக்கு உழைப்பின் அவசியத்தை உணர்த்தவும், அவர்கள் புதுத்திறன்களைக்

கற்கவும், முத்திரை அரக்கு, நெசவுப் பிரிவு, சலவை சோப்பு தயாரிப்பு தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், புத்தகம் கட்டுதல், காலணி தொழிற்கூடம், தையற்கூடம், கோர்ப்பான்கள் உற்பத்தி, தோட்டக்கலை மேம்பாடு, விவசாய உற்பத்தி, உர உற்பத்தி, அடுமனை தொழிற்கூடம் போன்ற பல்வேறு தொழிற் கூடங்கள் சிறைகளில் நிறுவப்பட்டுள்ளன. இத்தொழிற்கூடங்கள் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் சிறைவாசிகள் தங்களை உபயோகமான பணிகளில் ஈடுபடுத்திக்கொள்ளவும் உதவுகின்றன.

சிறைத்துறை ‘சேவைத்துறை’ என்ற வகையில் பல்வேறு அரசுத்துறைகளுக்கு பொருட்கள் வழங்குவதில் சிறப்புரிமை பெற்றுள்ளது. சிறைத் தொழிற்கூடங்களில் தயாரிக்கப்படும் சிறை செய் பொருட்களான, முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, மழைக் கோட்டு, சீருடைக் காலணிகள், சீருடைத்துணி மற்றும் பிற துணிகள், ‘தீ’ வாளிகள், மருந்து பெட்டகங்கள் (Bed-side Lockers) போன்றவை பல்வேறு அரசுத் துறைகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.

**2013–2014** ஆம் ஆண்டில் சிறைத் தொழிற் கூடங்களின் உற்பத்தி மதிப்பு, எப்போதுமில்லாத அளவுக்கு அதிகபட்சமாக ரூபாய் **13.09** கோடி உள்ளது.

“எல்.ஈ.டி” விளக்குகள் மற்றும் “சானிடரி நாப்கின்கள்” போன்றவை அரசு சாரா நிறுவனங்கள் உதவியுடன் சிறைவாசிகளால் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு சிறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்த திட்டங்களான கல்வி / தொழிற் கல்வித் திட்டங்களுடன் சிறை தொழிற் கூடங்களில் பெறும் செய்முறை அனுபவங்கள், சிறைவாசிகள் தங்களது விடுதலைக்குப் பின்னர் புதிய வாழ்வு பெறவும், சமுதாயத்தில் இணைந்து கண்ணியத்துடன் வாழவும் வழிவகுக்கின்றன.

## இலவச சட்ட உதவி

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக்குழு, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் தலா ஒரு இலவச சட்ட உதவி மையத்தை அமைத்துள்ளது.

## <u>சிறைவாசிகளின் குறை தீர்க்கும் செயலாக்க முறை</u>

சிறைவாசிகளின் குறைகளை தீர்வு செய்வதற்கு சிறைத் துறை முன்னுரிமை அளித்து வருகிறது. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஏதுவாக, அனைத்து மத்திய சிறைகளிலும், மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார்கள் உரிய நடவடிக்கைக்காக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதுதவிர அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளை ஆய்வு செய்வதுடன், அவர்களின் குறைகளையும் கேட்டு அறிகின்றனர். சிறைகளில் வருடாந்திர ஆய்வின்போது கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறைத் தலைவரும், சிறைத்துறைத் துணைத் தலைவர்களும், ஒவ்வொரு சிறைவாசியின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

## <u>மனித உரிமை பாதுகாப்பு</u>

சிறைவாசிகளின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு, சிறை நிர்வாகத்தில் அதிக

முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இப்பொருள் குறித்து சிறை அலுவலர்களுக்கு போதுமான கூர்ந்துணர்வு வழங்கப்படுவதுடன் அனைத்துப் பயிற்சிகளிலும், புத்தாக்கப் பயிற்சிகளிலும் சிறைவாசிகளின் மனித உரிமை தொடர்பான கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளன. சிறை நிர்வாகம் மற்றும் சிறைவாசிகள் நடத்தப்படும் முறை குறித்து ஆய்வு செய்வதற்கு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள், குறித்த கால இடைவெளியில் சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் அளிக்கப்படுவதையும், அவர்கள் கண்ணியமாக நடத்தப்படுவதையும் உறுதி செய்துகொள்வதற்காக மனித உரிமை ஆணையங்களின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்களும் சிறைகளுக்கு வருகைபுரிகின்றனர். இது தவிர, சிறைகளைத் திடீர் பார்வையிட்டு, அங்கு மனித உரிமை மீறல்கள் ஏதேனும் உள்ளனவா என்று சோதனை செய்திட பொது மக்களில் 11 நபர்கள் அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறைகளுக்கு வருகை புரிந்துள்ள தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையங்களின் உறுப்பினர்களும் மற்றும் மாண்புமிகு நீதிபதிகளும் இம்மாநிலத்தின் சிறை

நிர்வாகத்தைப் பாராட்டி உள்ளனர் என்பது இங்கு பெருமையுடன் கூறத்தக்கதாகும்.

## V. சிறைத்துறைப் பணியாளர்கள் நலன்

### புதிய பதவிகள் தோற்றுவித்தல்

மத்திய சிறைகளில் உள்ள தண்டனைக் குறைப்பு பிரிவில் சிறைவாசிகளின் நலன் தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவில் மேற்கொள்ளப்படும் பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்தில் உள்ள 9 மத்திய சிறைகளில் தலா ஒரு அலுவலகக் கண்காணிப்பாளர் வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.2.96 கோடி தொடர் செலவினத்தில், 9 அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடங்களைத் தோற்றுவிக்க, அரசாணை (நிலை) எண்.794, உள் (சிறை.2) துறை, நாள்:07.10.2013ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

### சட்ட ஆலோசகர் நியமனம்

அரசாணை (நிலை) எண்.689, உள்(சிறை.4)துறை, நாள்:28.10.2011–ல் கூடுதல் காவல்துறை இயக்குநர்/ சிறைத்துறை தலைவர் அலுவலகத்தில், சட்டம் தொடர்பான நேர்வுகளில் துறைத்தலைவருக்கு உதவிடும் பொருட்டு ஒரு சட்ட ஆலோசகர் கொண்ட சட்டப்பிரிவைத் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## நிர்வாக அமைப்பினை சீர்செய்தல்

சிறைத்துறையின் நிர்வாக அமைப்பு, ரூ.2.07 கோடி தொடர் செலவினத்தில் 672 முதல் நிலை சிறைக்காவலர் பதவிகள், 349 முதல் தலைமை சிறைக் காவலர் பதவிகள் மற்றும் 95 உதவி சிறை அலுவலர் பதவிகள் ஆகியன தோற்றுவிக்கப்பட்டதன்மூலம் சீர்செய்யப்பட்டுள்ளது. இதனால் 1116 சிறைப் பணியாளர்கள் அடுத்த நிலைக்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

## ஆள் சேர்த்தல் மற்றும் பயிற்சி

தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம், இரண்டாம் நிலை சிறைக்காவலர்களைத் தேர்வு செய்கிறது. 2011–2012 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 377 இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2012–2013 மற்றும் 2013–2014–ஆம் ஆண்டுகளுக்கு, 636 இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு செய்யப்பட உள்ளனர்.

வேலூரில் 130 சிறைக் காவலர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கும் வசதி கொண்ட காவலர் பயிற்சி பள்ளி ஒன்று, வேலூர் மத்தியசிறை கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் அதிக

எண்ணிக்கையிலான சிறைக்காவலர்கள் தேர்வு செய்யப்பட்டதால், திருச்சியில் தற்காலிக காவலர் பயிற்சி மையம் தோற்றுவிக்கப்பட்டு அவர்களுக்குக் காவல்துறை களப்பணியாளர்களின் உதவியுடன் அடிப்படை பயிற்சி அளிக்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்படும் காவலர்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, மேலாண்மை மற்றும் சீர்திருத்த முறைகள் ஆகியவற்றில் ஆறு மாதங்களுக்கு அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. உள்ளரங்கப் பயிற்சியின்போது, சிறைவாசிகளின் மனித உரிமைகளின் முக்கியத்துவம் குறித்து சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது. அவர்களுக்கு நவீன படைக்கலன்கள் மற்றும் சாதனங்களைக் கையாள்வதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சிறைத்துறையில் புதிதாகத் தேர்வு செய்யப்படும் சிறைக்காவலர்கள், அவர்கள் பணியாற்றவிருக்கும் இடம், சூழ்நிலை மற்றும் பணியின் தன்மை ஆகியவற்றை அறிந்துகொள்ள, மத்திய சிறைகளில் ஒரு மாதம் பயிற்சி பெற ஏதுவாக பயிற்சிக் காலத்தை 6 மாதத்தில் இருந்து 7 மாதமாக நீட்டித்து அரசாணை (நிலை) எண்.312, உள் (சிறை.2) துறை, நாள்:05.05.2014–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, மருதம், காவல் துறை அதிரடிப்படைப் பயிற்சிப் பள்ளியில் வழங்கப்படும் ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றைச் செயலிழக்கச் செய்தல், அதிரடிப் பயிற்சி மற்றும் இதர பயிற்சிகளும் சிறைக்காவலர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், குத்துச்சண்டை, ஜுடோ மற்றும் மல்யுத்தம் ஆகியவற்றின் நுணுக்கங்களை கொண்ட ஒருங்கிணைந்த “க்ரவ் மேகா” என்ற ஆயுதமின்றி தனித்து போரிடும் தற்காப்பு முறை பயிற்சியும் வேலூர் காவலர் பயிற்சி மையத்தில் அளிக்கப்படுகிறது. இத்தகைய பயிற்சித்திட்டங்கள் சிறைக் காவலர்களின் தைரியத்தை உயர்த்துவதுடன் அவர்கள் அவசரகால சூழ்நிலைகளை திறம்பட சமாளிக்க ஏதுவாக அமைகின்றன.

சிறைக்காவலர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை பயிற்சிமட்டுமல்லாது, முதல் தலைமை சிறைக்காவலர்கள், உதவி சிறை அலுவலர்கள் மற்றும் துணை சிறை அலுவலர்களுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## <u>சிறை மற்றும் நிர்வாக சீர்திருத்தப் பயிற்சியகம் (Academy of Prisons and Correctional Administration), வேலூர்</u>

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சார்ந்த

சிறைத்துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க, சிறை மற்றும் நிர்வாக சீர்திருத்த பயிற்சியகம் என்ற நான்கு தென்னக மாநிலங்களின் கூட்டுப் பயிற்சிமையம் 1979 ஆம் ஆண்டு வேலூரில் தொடங்கப்பட்டது. இப்பயிற்சியகத்தின் நடைமுறை செலவினத்தை நான்கு மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன. 2014–2015 ஆம் ஆண்டிற்கு இந்நிறுவனத்தின் நடைமுறைச் செலவு ரூ.2.20 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் தமிழகத்தின் பங்கு ரூ.55 இலட்சம் ஆகும்.

இந்நிறுவனம், சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி பயிற்சியளித்து வருகிறது. இதுவரை இப்பயிற்சியகத்தில் தமிழ்நாட்டை சேர்ந்த 1409 சிறைத்துறை அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

<u>இதர பயிற்சித் திட்டங்கள்</u>

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகளைத் தவிர புதுடில்லியில் உள்ள காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய தடய அறிவியல் நிறுவனம், தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனம், லோக்நாயக் ஜெயபிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவற்றால் மனித உரிமைகள் மற்றும்

சிறை மேலாண்மை முதலியவற்றில் நடத்தப்படும் தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகளுக்கும் அலுவலர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். 2013–2014 ஆம் ஆண்டில், 150 அலுவலர்கள் மேற்கூறிய தேசிய அளவிலான மையங்களில் பல்வேறு பயிற்சி திட்டங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

<u>பதக்கங்கள்</u>

பணிக்காலத்தில், வீரதீரத்துடன் போற்றத்தக்க வகையிலும் சிறந்த பணிப்பதிவுருவைப் பேணும் சிறைத்துறையின் சீருடைப் பணியாளர்களின் திறமையை அங்கீகரித்து, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அத்தகையோருக்கு கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறைச்சாலை சேவைக்கான பதக்கம்</u>

<u>அண்ணா பதக்கம்</u>

ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு 10 சிறைத் துறைப் பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகையை அரசாணை (நிலை) எண்.890, உள் (மிகக்கமுக்கம்) துறை, நாள் 20.12.2011–ன்படி கீழ்க்கண்டவாறு அரசு உயர்த்தியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறைஅலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை | .. | ரூ.10,000/– |
| 2. | உதவி சிறைஅலுவலர் மற்றும் துணை சிறைஅலுவலர் | .. | ரூ. 6,000/– |
| 3. | இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல், முதல் தலைமைக் காவலர் வரை | .. | ரூ. 4,000/– |

<u>தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணிப் பதக்கம் பொங்கல் பதக்கம்</u>

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 60 முதல் நிலை மற்றும் இரண்டாம்நிலை சிறைக் காவலர்களுக்கு அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுவோருக்கு மாதந்தோறும் ரூ.100/– பதக்கப்படியாக வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது இப்பதக்கப்படியை ரூ.100/–லிருந்து ரூ.200/–ஆக அரசு உயர்த்தியுள்ளது.

<u>தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம்</u>

முந்தைய திட்டத்தின்படி தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறுவோர்க்கு மாதாந்திரப் படியாக ரூ.300/– வழங்கப்பட்டு வந்தது. தற்போது, முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு அவர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும்,

அரசாணை (நிலை) எண்.92, உள் (மிகக் கமுக்கம்) துறை, நாள்:05.02.2014–ன்படி, ஒருமித்த தொகையாக ரூ.5.00 இலட்சம் வழங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்</u>

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று சிறைத்துறையினரின் அப்பழுக்கற்ற பணியினைப் பாராட்டி இப்பதக்கம் வழங்கப்படுகிறது. 2013 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்றும், 2014 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்றும் தலா 4 சிறைத்துறையினருக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

<u>கருணைத் தொகை வழங்குதல்</u>

பணியின் போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிடும் பணியாளர்களின் சேவையை அங்கீகரிக்கும் விதமாக அவர்களின் வாரிசுதாரர்களுக்கு, பணியாளர்கள் கடைசியாக பெற்ற சம்பளம் அப்பணியாளர் உயிரோடு இருந்தால் பணிமூப்பில் ஓய்வுபெறும் நாள் எதுவோ, அதுவரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாக ரூ.2,00,000/–ம் வழங்கப்படுகிறது. மரணம் போன்ற நேர்வு தவிர கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கும்

அவைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

1. நிரந்தர ஊனம் ..ரூ. 50,000/–

2. படுகாயம் ..ரூ. 10,000/–

3. சாதாரண காயம் ..ரூ. 5,000/–

<u>இடர்படி, உணவுக் கட்டணம் மற்றும் தையற் கட்டணம்</u>

(அ) சிறைத் துறையினருக்கு வழங்கப்படும் இடர்படி காவல் துறையினருக்கு இணையாக இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரை மாதம் ரூ.400/– ஆகவும், சிறை அலுவலர் முதல் கண்காணிப்பாளர் வரை மாதம் ரூ.450/– ஆகவும் உயர்த்தி அரசாணை (நிலை) எண்.948, உள் (சிறை.2) துறை, நாள்:01.11.2013–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நெருக்கடி நிலையின் போதும், பெருந்திரளானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அனுமதிக்கப்படும் போதும், சென்னையைத் தவிர இதர மத்தியசிறைகளில் பாதுகாப்புப் பணிகளில் அமர்த்தப்படும் இரண்டாம் நிலை சிறைக்காவலர்களுக்கு ரூ.35/– வீதமும், முதல் நிலை / முதல் தலைமை சிறைக் காவலர்களுக்கு ரூ.40/– வீதமும், துணைச் சிறை அலுவலர் வரையிலான மற்ற அனைவருக்கும் ரூ.50/– வீதமும்,

சென்னை நகரில் உள்ள துணைச் சிறை அலுவலர் வரையிலான அனைத்து சிறைத்துறையினருக்கும் ரூ.80/– வீதம் உணவுக் கட்டணமாக வழங்க, அரசாணை (நிலை) எண்.730, உள் (சிறை.2) துறை, நாள்:16.08.2002–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(இ) சிறைத்துறையில் உள்ள இரண்டாம் நிலை சிறைக்காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரு சீருடை தைப்பதற்கு வழங்கப்பட்டு வரும் தையற்கட்டணத்தை ரூ.250/–ல் இருந்து ரூ.450/–ஆக உயர்த்தி வழங்க அரசாணை (நிலை) எண்.814, உள்(சிறை.2) துறை, நாள்:08.10.2013ல் ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு, ரூ.15.00 இலட்சம் கூடுதல் தொடர் செலவினம் ஏற்படும். இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான சிறைத்துறையினருக்கு வழங்கப்பட்டு வந்த சலவைப்படி, அரசாணை (நிலை) எண்.604, உள் (சிறை.2) துறை, நாள்: 07.08.2012–ன்மூலம், மாதம் ரூ.200/–லிருந்து ரூ.250/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

## மிகை நேரப் பணி ஊதியம்

வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம்நிலை சிறைக் காவலர்களுக்கு மிகை நேரப் பணி ஊதியமாக, ரூ.200/– வழங்கப்படுகிறது.

## இரவு உணவுப்படி

சிறைக் காவலர்களுக்கு வழங்கப்படும் இரவு உணவுப்படி நாளொன்றுக்கு ரூ.12/–லிருந்து ரூ.100/– ஆக அரசாணை (நிலை) எண்.354, உள் (சிறை.2) துறை, நாள் :14.05.2012–ல் உயர்த்தப்பட்டுள்ளது.

## மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள்

இரண்டாம் நிலை சிறைக்காவலர் நிலையிலிருந்து துணை சிறை அலுவலர் வரையிலான பணியாளர்களுக்கு நியாய விலை கடைகளின் மூலம் விலையில்லா அரிசியும், 50 சதவிகித விற்பனை விலையில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

## காவல்துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்

காவல்துறைச் சிறப்பு அங்காடிகளில் (Police Canteen) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் வசதி அரசாணை (நிலை) எண்.421,

உள் (காவல்.17) துறை, நாள்:08.06.2012—ன்படி, சிறைத்துறையினருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

<u>குழுக் காப்பீட்டுத் திட்டம்</u>

பணியில் இருக்கும் போதோ அல்லது விபத்தின் காரணமாகவோ இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு சிறைத்துறையினருக்கான குழுக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையானது அரசாணை (நிலை) எண்.503, உள் (சிறை.2) துறை, நாள்:04.07.2012—ன்படி, ரூ.1,00,000/—லிருந்து ரூ.2,00,000/— ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால், சிறைத்துறைத் துணைத் தலைவர் முதல் இரண்டாம் நிலை சிறைக்காவலர் வரையிலான சிறைத்துறையினர் பயன் பெறுவர்.

<u>பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை</u>

சிறைத்துறையின் பல்வேறு நிலைகளிலுள்ள மூத்த அலுவலர்களால், குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் திட்டப்படி நடத்தப்பட்டு, சிறைப்பணியாளர்களின் குறைகள் களையப்படுகின்றன. கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறை தலைவரால் காலாண்டிற்கு ஒருமுறையும், சரக சிறைத்துறைத் துணைத்தலைவர்களால் மாதம் ஒருமுறையும், மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களால், வாரம் ஒருமுறையும் பணியாளர்களின் குறை தீர்ப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு

அக்கூட்டங்களின்போது பணியாளர்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

<u>உங்கள் சொந்த இல்லத்திட்டம்</u>

காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் 47.60 ஏக்கர் நிலப்பரப்பில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களுக்கு ரூ.455.55 கோடி செலவில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தால் 2673 வீடுகளைக் கட்டுவதற்கான இந்த முன்னோடித் திட்டம் 26.10.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு பெற்ற 35 சிறைத்துறைப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்க அரசாணை (நிலை) எண்.119, உள் (காவல்.10) துறை, நாள்:18.02.2014–ல் ரூ.3.76 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>100 பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்</u>

அரசாணை (நிலை) எண்.90, உள் (சிறை.4) துறை, நாள்: 20.01.2012–ன்படி மதுரை, சேலம், திருச்சி மற்றும் கடலூர் ஆகிய நான்கு மத்திய சிறைகளில் தலா 25 குடியிருப்புகள்

வீதம் மொத்தம் 100 பணியாளர் குடியிருப்புகளை ரூ.7.66 கோடி செலவில் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

2013–2014–ஆம் ஆண்டில் மத்தியசிறைகள், கடலூர், திருச்சி, கோவை மற்றும் பாளையங்கோட்டை ஆகியவற்றில் மொத்தம் 100 பணியாளர் குடியிருப்புகளை ரூ.11.94 கோடி செலவில் கட்ட, அரசாணை (நிலை) எண்.1019, உள் (சிறை.4) துறை, நாள்:27.11.2013–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் குடியிருப்பின் கீழ்பரப்பளவு 550 சதுர அடியிலிருந்து 650 சதுர அடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

<u>பணியாளர் குடியிருப்புக்களைப் புதுப்பித்தல்</u>

சிறைத்துறையில் உள்ள 918 பணியாளர் குடியிருப்புகளை ரூ.1.8 கோடி செலவில் புதுப்பிக்க, அரசாணை (நிலை) எண். 1039, உள் (சிறை.4) துறை, நாள்: 28.11.2013–ல் நிதி மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டு, இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

<u>புதிய கட்டடம் கட்டுதல்</u>

சென்னை எழும்பூர், வேனல்ஸ் சாலையில் ரூ.8.75 கோடி செலவில் சிறைத் துறை தலைமை

அலுவலகத்திற்கான தனிக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## VI. புதிய முன்முயற்சிகள்

### சிறைத்துறை மற்றும் சிறைவாசிகளின் நலனை ஆராய சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒரு அமைப்பை (Chair) தோற்றுவித்தல்.

நெறிபிறழ்ந்த செயல்களில் ஈடுபடும் நடத்தைக்கான உளவியல் மற்றும் சமூக ரீதியான காரணங்களைத் திட்டமிட்டு ஆராயவும், அந்நடத்தையை தடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து தெரிவிக்கவும், சிறைவாசிகளின் மறுவாழ்வு குறித்து ஆராய்ச்சி செய்யவும், ஒரு பேராசிரியரின் தலைமையின் கீழ் ஆராய்ச்சி அறிஞர்களைக் கொண்ட ஒரு அரங்கை ரூ.1 கோடி செலவில், சென்னை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்துவதற்காக, அரசாணை (நிலை) எண்.732, உள் (சிறை.3) துறை, நாள்:04.11.2011–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

### புதிய தொழிற்கூடங்கள்

2014–2015ம் ஆண்டில் ரூ.5 கோடி செலவில் சிறைவளாகங்களில் தற்போதுள்ள உற்பத்தி கூடங்களை

மேம்படுத்தவும், தக்க தொழில்களில் புதிய உற்பத்தி பிரிவுகளைத் துவங்கவும் அரசு உத்தேசித்துள்ளது.

<u>சிறை அங்காடிகளை நிறுவுதல்</u>

சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் அவர்களது மனித சக்தியை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திட, சிறை வளாகங்களின் எல்லைகளுக்குள், ''சிறை அங்காடிகளை'' நிறுவிட அரசாணை (நிலை) எண்.360, உள் (சிறை.3) துறை, நாள்:15.05.2012–ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்து மத்திய சிறை வளாகங்களிலும், "சிறை அங்காடிகள்'' நிறுவப்பட்டுள்ளன. இந்த அங்காடிகளின் வளர்ச்சிக்காக ரூ.10 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்புநிதி உருவாக்கப்பட்டுள்ளது. புழல் மத்தியசிறை வளாகத்தில் நிறுவப்பட்ட சிறை அங்காடி 9.12.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. சிறை அங்காடி கிளை ஒன்று சிறைத்துறை தலைமை அலுவலக வளாகத்தில் செயல்படுகிறது. இந்த அங்காடிகளில் சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் அடுமனைப் பொருட்கள், காகித டம்ளர்கள், வாழ்த்து அட்டைகள், தோல் காலணிகள், பர்ஸ், சுத்திகரிக்கப்பட்ட நீர், தோட்டக்கலை தயாரிப்புகள், சலவை சோப்பு மற்றும் சலவைப் பவுடர்,

மெழுகுவர்த்தி, கொசுவலை, மழைக்கோட்டுகள், ஆயத்த ஆடைகள், தேன், மசாலாத்தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப்புத்தகங்கள், ஒட்டுப்பசை, இயற்கை உரமிட்ட காய்கறிகள், மண்புழு உரம், பஞ்ச கவ்யம் போன்ற பொருட்கள் "Freedom" என்ற வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இச்சிறை அங்காடிகளில் உணவகம், சலவை நிலையம், முடி திருத்தும் நிலையம் மற்றும் இதர சில்லரை வணிக நிலையங்களும் சேர்க்கப்பட உள்ளன.

<u>புழல், மத்தியசிறை–I ல் அடுமனை (Bakery) தொழிற்கூடம்</u>

சிறைவாசிகளிடையே உழைக்கும் மனப்பான்மையை உருவாக்கிடவும், சிறையிலிருந்து விடுதலையான பின் பொருளின்மையால் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாது தங்களது வாழ்வாதாரத்திற்குத் தேவையான வருவாயை தாங்களே ஈட்டிக் கொள்வதற்காகவும், பல்வேறு தொழிற்பயிற்சிகள் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக, அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்பயிற்சியை சிறையில் அளிக்கும் வகையில், புழல், மத்திய சிறை–Iல் ரூ.45.00 இலட்சம் செலவில் ஒரு அடுமனை தொழிற்கூடம் அரசாணை (நிலை) எண்.405, உள் (சிறை–3) துறை, நாள்:07.06.2012–ன்படி நிறுவப்பட்டது. இந்த

அடுமனை தொழிற்கூடம் **09.12.2013** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த தொழிற்கூடத்தில் சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும், ரொட்டி, பன் மற்றும் பிஸ்கெட்டுகள் போன்ற அடுமனைப் பொருட்கள் சிறைகளுக்கு விநியோகம் செய்யப்படுவதுடன், சிறை அங்காடிகள் மூலமாக பொதுமக்களுக்கும் உரிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

<u>தச்சுக் கூடங்களை மேம்படுத்துதல்</u>

ரூ.**18.00** இலட்சம் செலவில் வேலூர், கடலூர், சேலம், திருச்சி ஆகிய **4** மத்திய சிறைகளிலுள்ள தச்சுக் கூடங்களை நவீனமயமாக்குவதற்கு தேவையான இயந்திரங்கள், உபகரணங்களைக் கொள்முதல் செய்ய அரசாணை (நிலை) எண்.**813**, உள் (சிறை.**3**) துறை, நாள்:**08.10.2013**–ல் அரசு அனுமதி வழங்கியது. அதன்படி அந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

<u>கைமுறை காகித தயாரிப்புக் கூடம் நிறுவுதல்</u>

தமிழகத்தில் உள்ள **9** மத்திய சிறைகளில் கைமுறை காகித தயாரிப்புக் கூடம் நிறுவ தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்க அரசாணை (நிலை) எண்.**1018**, உள்(சிறை.**3**) துறை, நாள்:**27.11.2013**ல் ஒரு மத்திய சிறைக்கு

ரூ.10.00 லட்சம் வீதம் ரூ.90.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள நெசவு தொழிற் கூடத்தினை மேம்படுத்துதல்</u>

கோவை மத்தியசிறையில் உள்ள நெசவுத் தொழிற் கூடத்தினை மேம்படுத்தவும், அங்கு சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், உற்பத்தியினை அதிகரித்திடவும், ரூ.1.5 கோடி செலவில் நான்கு நவீன நெசவு இயந்திரங்களை துணைக் கருவிகளுடன் வாங்க அரசாணை (நிலை) எண்.1017, உள் (சிறை.3) துறை, நாள் 27.11.2013–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

<u>சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்தல்</u>

அரசாணை (நிலை) எண். 489, உள் (சிறை.4)துறை, நாள்: 11.07.2013ல், ரூ.2.41 கோடி செலவில் புழல் மத்தியசிறை வளாகத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனத்தை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி குழுமம் மூலம் நிறுவி செயல்படுத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

<u>புதிய மாவட்டச் சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகள் கட்டுதல்</u>

மத்திய சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கவும், சம்மந்தப்பட்ட மாவட்டங்களுக்குட்பட்ட சிறைவாசிகளை சிறை

மற்றும் நீதிமன்றங்களுக்கு எளிதில் அழைத்துச் சென்று வரவும், 2013–2014–ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் உள்ள பேரூரணி, செங்கல்பட்டு, திருப்பூர், விழுப்புரம் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.40.48 கோடி செலவில் மாவட்டச் சிறைகள் கட்டுவதற்கும் / மாவட்டச் சிறைகளாக உயர்த்துவதற்கும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெண் சிறைவாசிகளின் நன்மைக்காக, அவர்களை இலகுவாக நீதிமன்றங்களுக்குக் கொண்டுசெல்லவும், அவர்களது குடும்பத்தினருடன் நேர்காணலை எளிதாக்கவும் ரூ.3.74 கோடி செலவில் பெண்கள் தனிச்சிறை கட்ட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## VII. முடிவுரை


தவறு செய்பவர்களுக்கு தண்டனை வழங்குதல், மீண்டும் அவர்கள் தவறு செய்யா வண்ணம் நன்னெறிப்படுத்துதல் என்ற சிறைத்துறையின் இரட்டைக் குறிக்கோள்களை அடைய தமிழ்நாடு அரசு சிறைத்துறை சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. சிறைச்சாலைகளில்

ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்யும் அதே வேளையில் சிறைவாசிகளது உரிமை மற்றும் கண்ணியத்தைப் பேணுவதில் எந்த சமரசமும் செய்யப்படுவதில்லை. சிறைவாசிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவில் சத்தான உணவினை வழங்கிக் கொண்டிருப்பதன் மூலமாகவும் சிறைச்சாலைகள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் சுகாதாரமான சூழ்நிலையைப் பராமரித்துக் கொண்டிருப்பதன் மூலமாகவும் சிறைவாசிகளின் உடல் நலம் மற்றும் மன நலத்திற்கு இத்துறை உயர்முக்கியத்துவம் அளிக்கிறது. சிறைத் தொழிற்சாலைகளில் வழங்கப்படும் அனுபவ அறிவு இணைந்த தொழில் மற்றும் வேலைவாய்ப்பு கல்வி, விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடா வண்ணம் தடுப்பதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்பைப் பெற்று கண்ணியத்துடன் வாழ உதவுகிறது.

**எஸ்.பி. வேலுமணி**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி,**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

**பிற்சேர்க்கை– I**

**சிறைத்துறையின் நிர்வாக அமைப்பு**




குறிப்பு: மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் ( புழல் மத்திய சிறை –2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

## <u>பிற்சேர்க்கை-II</u>
## <u>சிறைச்சாலைகளில் அனுமதிக்கப்பட்ட இடவசதி பற்றிய விவரம்</u>

| **சிறைகள்** | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|
| **சென்னை மாவட்டம்** | |
| பார்ஸ்டல் பள்ளி, சைதாப்பேட்டை | 75 |
| **காஞ்சிபுரம் மாவட்டம்** | |
| கிளைச்சிறை, காஞ்சிபுரம் | 34 |
| கிளைச்சிறை, மதுராந்தகம் | 62 |
| தனிக்கிளைச்சிறை, செங்கல்பட்டு | 120 |
| **திருவள்ளூர் மாவட்டம்** | |
| மத்திய சிறை–1, புழல் | 1250 |
| மத்திய சிறை–2, புழல் | 1250 |
| பெண்கள் தனிச் சிறை, புழல் | 500 |
| கிளைச்சிறை, திருவள்ளூர் | 36 |
| கிளைச்சிறை, பொன்னேரி | 42 |
| கிளைச்சிறை, திருத்தணி | 36 |
| தனிக்கிளைச் சிறை, பூந்தமல்லி | 52 |
| **வேலூர் மாவட்டம்** | |
| மத்தியசிறை, வேலூர் | 2130 |
| பெண்கள் தனிச்சிறை, வேலூர் | 469 |
| பார்ஸ்டல் பள்ளி, வேலூர்(இணைப்பு) | 40 |
| கிளைச்சிறை, ஆம்பூர் | 20 |
| கிளைச்சிறை, அரக்கோணம் | 36 |
| கிளைச்சிறை, திருப்பத்தூர் | 74 |
| கிளைச்சிறை, வாணியம்பாடி | 30 |
| கிளைச்சிறை, வாலாஜா | 19 |
| கிளைச்சிறை, குடியாத்தம் | 54 |
| கிளைச்சிறை, செய்யாறு | 48 |

| | |
|---|---|
| **திருவண்ணாமலை மாவட்டம்** | |
| கிளைச்சிறை, திருவண்ணாமலை | 49 |
| கிளைச்சிறை, ஆரணி | 17 |
| கிளைச்சிறை, செங்கம் | 9 |
| கிளைச்சிறை, போளூர் | 36 |
| கிளைச்சிறை, வந்தவாசி | 19 |
| **கடலூர் மாவட்டம்** | |
| மத்திய சிறை, கடலூர் | 723 |
| கிளைச்சிறை, கடலூர் (பெண்கள்) | 100 |
| கிளைச்சிறை, கடலூர் | 143 |
| கிளைச்சிறை, விருதாச்சலம் | 30 |
| கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை | 24 |
| பார்ஸ்டல் பள்ளி, பண்ருட்டி | 15 |
| கிளைச்சிறை, சிதம்பரம் | 28 |
| **விழுப்புரம் மாவட்டம்** | |
| கிளைச்சிறை, விழுப்புரம் | 42 |
| கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி | 18 |
| கிளைச்சிறை, திண்டிவனம் | 29 |
| கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை | 24 |
| கிளைச் சிறை, திருக்கோவிலூர் | 24 |
| பார்ஸ்டல் பள்ளி, செஞ்சி | 80 |
| **சேலம் மாவட்டம்** | |
| மத்திய சிறை, சேலம் | 1431 |
| மாவட்டச்சிறை, ஆத்தூர் | 200 |
| பண்ணைச்சிறை, சேலம் | 10 |
| தனிக்கிளைச்சிறை, சேலம் (பெண்கள்) | 110 |
| பார்ஸ்டல்பள்ளி, சங்ககிரி | 27 |
| கிளைச்சிறை, ஓமலூர் | 48 |

| | |
|---|---|
| **நாமக்கல் மாவட்டம்** | |
| கிளைச்சிறை, நாமக்கல் | 34 |
| பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி | 16 |
| கிளைச்சிறை, இராசிபுரம் | 24 |
| கிளைச்சிறை, திருச்செங்கோடு | 19 |
| **தருமபுரி மாவட்டம்** | |
| கிளைச்சிறை, தருமபுரி | 36 |
| கிளைச்சிறை, அரூர் | 48 |
| **கிருஷ்ணகிரி மாவட்டம்** | |
| கிளைச்சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்) | 73 |
| கிளைச்சிறை, ஊத்தங்கரை | 16 |
| கிளைச்சிறை, ஓசூர் | 44 |
| **கோவை மாவட்டம்** | |
| மத்திய சிறை, கோவை | 2242 |
| திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூர் | 100 |
| கிளைச்சிறை, மேட்டுப்பாளையம் | 36 |
| பார்ஸ்டல் பள்ளி, பொள்ளாச்சி | 97 |
| **ஈரோடு மாவட்டம்** | |
| கிளைச்சிறை, ஈரோடு | 35 |
| கிளைச்சிறை, சத்தியமங்கலம் | 16 |
| கிளைச்சிறை, பவானி | 24 |
| கிளைச்சிறை, பெருந்துறை | 8 |
| மாவட்டச்சிறை, கோபிச்செட்டிபாளையம் | 200 |
| **நீலகிரி மாவட்டம்** | |
| கிளைச்சிறை, ஊட்டி | 35 |
| கிளைச்சிறை, குன்னூர் | 32 |
| கிளைச்சிறை, கூடலூர் | 28 |

| | |
|---|---|
| **திருப்பூர் மாவட்டம்** | |
| கிளைச்சிறை, அவினாசி | 70 |
| கிளைச்சிறை, திருப்பூர் | 90 |
| கிளைச்சிறை, உடுமலைபேட்டை | 25 |
| கிளைச்சிறை, தாராபுரம் | 26 |
| கிளைச்சிறை, பல்லடம் | 24 |
| **திருச்சி மாவட்டம்** | |
| மத்தியசிறை, திருச்சி | 2517 |
| பெண்கள் தனிச் சிறை, திருச்சி | 600 |
| தனிக்கிளைச்சிறை, திருச்சி | 224 |
| கிளைச்சிறை, மணப்பாறை | 14 |
| கிளைச்சிறை, முசிறி | 17 |
| கிளைச்சிறை, துறையூர் | 17 |
| கிளைச்சிறை, லால்குடி | 23 |
| **அரியலூர் மாவட்டம்** | |
| பார்ஸ்டல் பள்ளி, அரியலூர் | 21 |
| கிளைச்சிறை, ஜெயங்கொண்டம் | 19 |
| **பெரம்பலூர் மாவட்டம்** | |
| கிளைச்சிறை, பெரம்பலூர் | 18 |
| **கரூர் மாவட்டம்** | |
| கிளைச்சிறை, கரூர் | 36 |
| கிளைச்சிறை, குளித்தலை | 26 |
| **மதுரை மாவட்டம்** | |
| மத்திய சிறை, மதுரை | 1252 |
| பார்ஸ்டல் பள்ளி, மேலூர் | 48 |
| கிளைச்சிறை, உசிலம்பட்டி | 18 |
| கிளைச்சிறை, திருமங்கலம் | 25 |
| **திண்டுக்கல் மாவட்டம்** | |
| மாவட்டச்சிறை, திண்டுக்கல் | 200 |

| | |
|---|---|
| கிளைச்சிறை, வேடசந்தூர் | 16 |
| கிளைச்சிறை, பழனி | 43 |
| கிளைச்சிறை, கொடைக்கானல் | 9 |
| கிளைச்சிறை, நிலக்கோட்டை (பெண்கள்) | 36 |
| **தேனி மாவட்டம்** | |
| கிளைச்சிறை, உத்தமபாளையம் | 21 |
| கிளைச்சிறை, பெரியகுளம் | 39 |
| **சிவகங்கை மாவட்டம்** | |
| கிளைச்சிறை, சிவகங்கை | 20 |
| கிளைச்சிறை, திருப்பத்தூர் | 22 |
| திறந்த வெளிச்சிறை, புரசடையுடைப்பு | 150 |
| **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| மாவட்டச்சிறை, இராமநாதபுரம் | 200 |
| கிளைச்சிறை, பரமக்குடி (பெண்கள்) | 18 |
| கிளைச்சிறை, முதுகுளத்தூர் | 21 |
| கிளைச்சிறை, திருவாடானை | 12 |
| **விருதுநகர் மாவட்டம்** | |
| மாவட்டச்சிறை, விருதுநகர் | 200 |
| கிளைச்சிறை, அருப்புக்கோட்டை | 13 |
| கிளைச்சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர் | 24 |
| கிளைச்சிறை, சாத்தூர்(பெண்கள்) | 29 |
| **திருநெல்வேலி மாவட்டம்** | |
| மத்திய சிறை, பாளையங்கோட்டை | 1332 |
| தனிக்கிளைச்சிறை, கொக்கிரகுளம் (பெண்கள்) | 84 |
| கிளைச்சிறை, தென்காசி | 44 |
| கிளைச்சிறை, சங்கரன்கோயில் | 12 |
| கிளைச்சிறை, அம்பாசமுத்திரம் | 16 |
| பார்ஸ்டல்பள்ளி, நாங்குநேரி | 107 |

| | |
|---|---|
| **தூத்துக்குடி மாவட்டம்** | |
| கிளைச்சிறை, தூத்துக்குடி | 40 |
| மாவட்டச்சிறை, ஸ்ரீவைகுண்டம் | 72 |
| கிளைச்சிறை, கோவில்பட்டி | 42 |
| கிளைச்சிறை, திருச்செந்தூர் | 37 |
| **கன்னியாகுமரி மாவட்டம்** | |
| மாவட்டச்சிறை, நாகர்கோவில் | 200 |
| கிளைச்சிறை, தக்கலை (பெண்கள்) | 24 |
| கிளைச்சிறை, குழித்துறை | 16 |
| **புதுக்கோட்டை மாவட்டம்** | |
| மாவட்டச்சிறை, புதுக்கோட்டை | 405 |
| பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை | 40 |
| கிளைச்சிறை, அறந்தாங்கி | 28 |
| கிளைச்சிறை, திருமயம் | 14 |
| கிளைச்சிறை, கீரனூர் | 8 |
| **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| கிளைச்சிறை, திருவிடைமருதூர் | 51 |
| பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர் | 87 |
| கிளைச்சிறை, பாபநாசம் | 46 |
| கிளைச்சிறை, பட்டுக்கோட்டை | 38 |
| கிளைச்சிறை, கும்பகோணம் | 44 |
| **நாகப்பட்டினம் மாவட்டம்** | |
| மாவட்டச்சிறை, நாகப்பட்டினம் | 200 |
| கிளைச்சிறை, சீர்காழி | 28 |
| கிளைச்சிறை, மயிலாடுதுறை | 24 |
| கிளைச்சிறை, தரங்கம்பாடி | 12 |

| திருவாரூர் மாவட்டம் | |
|---|---|
| கிளைச்சிறை, திருவாரூர் (பெண்கள்) | 20 |
| கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி | 28 |
| கிளைச்சிறை, நன்னிலம் | 24 |
| கிளைச்சிறை, மன்னார்குடி | 19 |
| **மொத்தம்** | **22,101** |